குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.65/2019

அ.சா. 1

2024–ம் ஆண்டு டிசம்பர் 03–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரித்திகா | ஜாதி | |
| கணவர் பெயர் | பிரபு | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.03 மணி,

Accused A1. Patti Ramasamy A2.Kaliyamoorthi, present. Advocate Mr. Kanagaraj present for A1. Advocate Mr. A.Nagenthiran present for A2. APP Mr.P.Suresh present.

**சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு 1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நான் தனியார் பள்ளியில் தலைமைய ஆசிரியராக பணிபுரிந்தேன் என்றால் சரி. நான் வழக்கமாக மாலை 05.00 மணிக்கு சம்பவ இடம் வழியாக இருசக்கர வாகனத்தில் செல்வேன். சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் சுமார் ஒரு கிலோ மீட்டர் துரம் இருக்கும் என்றால் சரிவர தெரியவில்லை. சம்பவ இடத்திற்கும் எனது வீட்டிற்கும் சுமார் 20–30 கி.,மீ இருக்கும். எனக்கு தமிழ் நன்கு எழுத படிக்க தெரியும் என்றால் சரி. நான் சம்பவம் நடந்த உடன் அருகில் இருந்த காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரி.

2. சம்பவம் நடந்து சுமார் 5 மணி நேரம் கழித்து தான் புகார் கொடுத்தேன் என்றால் சம்பவம் நடந்த உடன் எனது கணவர் சம்பவ இடத்திற்கு வந்த பின்பு நாங்கள் சென்று புகார் கொடுத்தோம். சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகளின் அடையாளத்தை புகாரிலும் போலீசார் விசாரணையிலும் முதல் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் இருசக்கர வாகனத்தில் கெல்மெட் அணிந்து சென்றதாக கூறியுள்ளேன்.

எதிரிகள் சென்ற இருசக்கர வாகனத்தின் வகை மற்றும் பதிவெண்ணை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி.

3. 2 மாதம் கழித்து போலீசார் அடையாளம் காட்டி தான் எனக்கு சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களை அடையாளம் தெரிந்து கொண்டேன் என்றால் சரி. சம்பவம் நடந்து சுமார் 10 நிமிடத்தில் எனது கணவருக்கு தகவல் கொடுத்தேன். வழக்கு சம்பவத்தில் தொலைந்த எனது நகைகளின் ரசீதை போலீசாரிடமும், நீதிமன்றத்திலும் ஒப்படைக்க வில்லை என்றால் சரி. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் எதிரிக்கு இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு 2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

4. (1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை ஏற்கப்படுகிறது மேலும் 2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்கிறது.) சம்பவம் நடந்த உடன் அவசர போலீஸ் எண் 100 க்கு நான் தகவல் சொல்லவில்லை என்றால் சரி. எதிரிகள் சம்பவத்தின் போது அணிந்து இருந்த தலைகவசத்தின் நிறத்தை போலீசாரிடமும், நீதிமன்ற விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரி. போலீசார் இவ்வழக்கு சம்பவத்தில் திருடுபோன எனது நகையின் வடிவம் மற்றும் அடையாளத்தை பற்றி விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

5. சம்பவத்தில் திருடு போன எனது நகையின் புகைப்படத்தை போலீசார் என்னிடம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டனர். நான் எனது நகையின் புகைப்படத்தை போலீசாரிடம் காண்பித்தேன். இவ்வழக்கு தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த நேரம் எனக்கு தெரியவில்லை. நான் புகார் கொடுத்த அன்றைய தினம் போலீசார் என்னை விசாரிக்க வில்லை என்றால் சரியல்ல. 2 மாதங்கள் கழித்து போலீசார் என்னை நகைகள் கிடைத்து விட்டதாக சொல்லி காவல் நிலையம் அழைத்தார்கள். அப்போது என்னிடம் அழைப்பானை என்னிடம் கொடுக்கவில்லை.

6. நான் காவல் நிலையத்தில் வைத்து நகைகளை பெற்ற போது அங்கு தங்க நகை நிபுணர்யாரும் இருந்தார்களா என்றால் நான் நீதிமன்றத்தில் வைத்து தான்

பெற்றுக் கொண்டேன். நான் காவல் நிலையத்தில் வைத்து எனது நகைகளை அடையாளம் காட்டினேன் என்றால் சரி. காவல் நிலையத்தில் எதிரிகளுக்கு அடையாள அணிவகுப்பு ஏதும் நடத்தப்படவில்லை என்றால் சரி. எனது தங்க நகைக்கும் அடையாள அணிவகுப்பு நடத்தப்படவில்லை. நான் போலீசாரிடம் எனது நகையின் அடையாளத்தை சொல்லவில்லை என்றாலும் நகையின் ஆவணம் ஏதும் ஒப்படைக்கவில்லை என்றாலும், எதிரிகளின் அடையாளத்தை குறிப்பிடவில்லை என்றாலும், பொய் புகார் கொடுத்துவிட்டு அதன்பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 01.24 மணி,

ஒம்/–ச.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.